எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

11 பெப்ரவரி 2018

பொது காலம் 6ம் ஞாயிறு

# Newbec

NEW WAY OF BEING CHURCH



# மலைப்புக்கு அப்பால் நம்பிக்கை

கடந்த சில ஞாயிற்றுக்கிழமை வாசகங்களில், புனித மாற்கு நற்செய்தியில் நமதாண்டவர் நிகழ்த்திய அற்புதங்களை நாம் படித்து வருகிறோம். அவதியுறும் மனிதர்கள் மீது இயேசு காட்டும் பரிவன்பை நாம் காண்கிறோம். அவர்கள் தங்களது நோய்களிலிருந்து குணம் பெற வேண்டுமென அவர் விரும்புகிறார். இவை அனைத்தும் மீட்பின் பணிக்கு இட்டுச் செல்கிறது என்பதை அவரது போதனைகள், அற்புதங்கள் வழி நாம் காணலாம். அவர்களுக்கு உடல் சுகத்தைத் தருவது மட்டும் அவரது எண்ணமல்ல, பாவ அடிமைத்தனத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் அவர்களுக்கு வாழ்வளிப்பதே அவர்களின் நோக்கம்.

இதனைக் காண்பதற்கு, மனுக்குலத்தின் வேதனையை ஆழ்ந்து அறிந்திருக்க வேண்டும். இதனால் அவர்களின் வேதனையைப் போக்குவதோடு அல்லாமல், அந்த வேதனையை தமது உடலில் தாங்கி கொள்ள சித்தமானார், இயேசு. இந்த பரிவன்பே, ஒவ்வொரு அற்புதங்களிலும் வெளிப்படுத்தப்படுகிறது. இந்த பேரன்பின் காரணமாகவே பிறருக்காகவும் நமக்காகவும் பாடுபட்டு மரித்தார். ஆயினும் இந்த மீட்பளிக்கும் அன்பு வெளிப்படுவதற்கு, குறித்த காலம் வரை அவரது உண்மையான பணியின் நோக்கம் மறைக்கப்பட்டிருந்தது. இந்த காரணத்திற்காகவே, அற்புதங்கள் நிகழும் போது அதனை யாரிடமும் சொல்ல வேண்டாம் என இயேசு கூறுவதை நற்செய்தியில் படிக்கிறோம். “வெளிப்படுத்தப்படாமல் மறைபொருளாய் இருக்கும் இறைஞானத்தை பற்றியே நாங்கள் பேசுகிறோம். அது நாம் மேன்மை பெற வேண்டும் என்னும் நோக்குடன் உலகம் தோன்றும் முன்பே கடவளின் திட்டத்தில் இருந்தது. இவ்வுலகத் தலைவர்கள் எவரும் அதை அறிந்து கொள்ளவில்லை. அறிந்திருந்தால் அவரக்ள மாட்சிக்குரிய ஆண்டவரைச் சிலுவையில் அறைந்திருக்கமாட்டார்கள்” என புனித பவுல் விளக்குகிறார் (1கொரி. 2:7–8).

அசுத்த ஆவி முதல் பிணிகள் வரை குணமடைந்தவர்களிடமும், தமது அன்புச்சீடர்களிடமும் அனைவரிடமும் தம்மை யாரிடமும் சொல்ல வேண்டாம் என உவமையிலும் நேரடியாகவும் இயேசு கூறி வந்தார். அவரது மரணத்திற்கு பின்னரே, ‘மீட்பின் ரகசியம்’ அவரது உயிர்தெழுதல் வழி பிறிட்டு வெளிப்பட்டது. அவரது போதனை மற்றும் அற்புதங்களின் நோக்கம் அனைத்தும் அறியப்பட்டது. சிலுவையும் உயிர்ப்புமின்றி, இயேசு செய்த பணியை முழுமையாக அறிந்து கொள்ள முடியாது. ஆகவே சிலுவையில் அவரைப் பின்தொடரா விட்டால், கிறிஸ்துவின் உண்மையான சீடர்கள் என நம்மை கூறிக்கொள்ள முடியாது.

தவக்காலத்தைத் தொடங்குவதற்கு முன், இன்றைய நற்செய்தியில் வரும் அற்புதம் கடைசியானது. அற்புதங்களை நாடி இயேசுவைச் சுற்றி வரும் கூட்டத்தைக் கண்டு மலைத்து விட வேண்டாம் என நமக்கு நினைவுறுத்தப்படுகிறது. குருத்தோலை தாங்கி மன்னரைப் போல் வரவேற்ற மக்கள் கூட்டம், பின்னர் சில நாள்கள் கழித்து, ‘சிலுவையில் அறையும்’ என கூச்சலிட்டதும் இதே கூட்டம்தான். மலைத்துப் போகும் நிலைக்கு அப்பால் நம்பிக்கை கொள்ள வேண்டுமென நமக்கு நினைவுறுத்தப்படுகிறது. நல்ல காலத்தில் எல்லாம் நன்றாக இருக்கும் போது புது தெம்புடன் இருக்கும் கிறிஸ்துவர்கள், ஆன்மீகக் கேடு கொண்ட பொல்லாத காலத்தின் போது கிடைப்பதை விட அதிகம் கொடுக்க வேண்டி வரும். அற்புதங்கள் நிகழும் போது இருந்த கூட்டம், சிலுவையின் போதும் இருந்திருந்தால், மானிட மகன் தனிமரமாக இருந்திருக்க மாட்டார்.

தவக்காலத்தில் காலடி எடுத்து வைக்க நாம் தயாராகும் வேளையில் வருங்காலத்திற்கு நமது நம்பிக்கையை வலுப்படுத்திக் கொள்வோம். பிறரின் மீட்புக்காக தன்னையே மறுத்து சிலுவைக்குக் கொண்டு செல்லும் பயணமே தவக்காலம். நமக்கு அருளப்பட்ட அந்த நம்பிக்கையை கைவிடாமல் இறுக்கப் பிடித்துக் கொள்ள வேண்டும். இயேசு கிறிஸ்துவே, நித்திய வார்த்தை, உயிருள்ள கடவுளின் மகன் என்ற மீட்பின் ரகசியம் வெளிப்படுத்தப்பட்ட குறித்த காலத்தில் நாம் வாழ்கிறோம். சிலுவைக்கு அப்பால் கல்லறை உண்டு, அங்கியிருந்து, இயேசுவின் பெயரில் நம்பிக்கை கொண்டு மரித்த அனைவருக்கும் வாழ்வளிக்க, இறந்தோரிடமிருந்து அவர் உயிர்த்தெழுந்தார். ✝

INTERNAL CIRCULATION ONLY
BUL 06/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

# மினவுதல் மாதா தேவாலயம்

85A, ஜலான் யாம் துவான், 70000 சிரம்பான்
தொ.பே : 06-762 4468 / 763 4934 / 767 7542
தொ.நகல் : 06-767 7544
Email: : serembanvisitation@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. அன்ட்ரு கூய்

*2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்:*

***எதிர்நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்***

*2018 பெப்ரவரி (மாசி) மாதத்தின் கருப்பொருள்:*

*ஒருமிக்க நாம் கிறிஸ்துவில் குணமடைகிறோம்*

## *மினவுதல் தேவாலயத்தின் 170ஆம் ஆண்டை நோக்கிய பயணம்*

## *( 1848 – 2018 )*

**பங்கு அலுவலக நேரம்:**

**திங்கள் - வெள்ளி:** காலை 8.30 - மாலை 5.30
**சனி :** காலை 8.30 - மாலை 7.30
**ஞாயிறு :** காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடை பெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: பொதுக்காலம் 6ஆம் ஞாயிறு: (ஆண்டு இரண்டு) சனி 10-02-2018 ஞாயிறு 18-02-2018**

லேவி 13: 1-2, 44-45 தி.பா 31: 1-2, 5, 11 1 கொரி 10: 31-11: 1 மாற்கு 1: 40-45

**ஆண்டவரே நீரே எனக்குப் புகலிடம் ( தி. பா 31 )**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 10 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (இளைஞர் குழு) | *முப்பெருநாள் கொண்டாட்டம் புனித லூர்து அன்னை சிற்றாலயம் - சாகா செபமாலை, திருப்பலி, திருச்சுற்றுபவணி* |
| ஞாயிறு | 11 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>1.00 ம<br>*6.00 மா* | திருப்பலி (தமிழ்) (புனித ஜோக்கிம்)<br>திருப்பலி (ஆங்கிலம்) (புனித பேர்னாட்)<br>திருப்பலி (சீனமொழி)<br>மாலை 4.30 தித்தி (சீ)<br>திருப்பலி (தே.மொ)<br>கிறிஸ்து ஒளி சிற்றாலயம் திருவிழா கம்.செபீர் (தே.மொ) | **மறைக்கல்வி (த) நடைபெறாது** (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 ( சீனம் )<br>**காலை 10.00மணி : லூர்து அன்னை சிற்றாலய திருவிழா திருப்பலி (த)** |
| திங்கள் | 12 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 13 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 14 | **விபூதி புதன் : காலை 6.45 (ஆ),** | **மாலை 6.00 (ஆ/சீ/தே.மொ)** | **இரவு 8.00 (த)** |
| வியா | 15 | 6.45 கா | திருப்பலி | ***இரவு 9.00 சீனப் புத்தாண்டு திருப்பலி – தித்தி (சீ)*** |
| வெள் | 16 | 9.00 கா சீனப்புத்தாண்டு திருப்பலி | | |

**தவக்காலம் 1ஆம் ஞாயிறு: ( ஆண்டு இரண்டு)**

தொ.நூ 9: 8-15, 44-45 தி.பா 24: 4-5ab, 6-7bc 8-9 1 பேதுரு 3: 18-22 மாற்கு 1: 12-15

**ஆண்டவரது உடன்படிக்கையைக் கடைப்பிடிப்போரின் பாதைகள் உண்மையானவை ( தி. பா 24 )**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 17 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (புனித டொமினிக்) | **25-02-2018 (ஞாயிறு) மதியம் 1.00 மணி தே.மொ திருப்பலி நடைபெறாது** |
| ஞாயிறு | 18 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>1.00 ம | திருப்பலி (தமிழ்) (முகிபுவ)<br>திருப்பலி (ஆங்கிலம்) (ம.கல்வி – படிவம் 1)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தே.மொ) | **மறைக்கல்வி (த) நடைபெறாது** (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

இன்று திருப்பலியை வழி நடத்திய **புனித ஜோக்கிம் அதிச** மற்றும் திருவழிபாட்டு குழுவினருக்கு நம்முடைய மனமார்ந்த நன்றிகள்

**2018 பெப்ரவரி (மாசி) மாத செய்திகள் / நிகழ்வுகள்**

1) **பங்கு ஆலய காணிக்கை**
03/04 பெப்ரவரி 2018 - ரிம: 9,318.20
சமூக அக்கறைப் பணிக்குழு : ரி.ம : 7,488.70
இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

➢ **மினவுதல் தேவாலய வின்செண்ட் டி போல் இயக்கத்தினர்:** ஏழைகளுக்கும், உதவி தேவைப்படுவோர்க்கும் ஆர்வத்தோடும் பணி செய்ய இன்னும் அதிகமான தன்னார்வலர்களைத் தேடுகின்றனர். உங்களுக்கு ஆர்வமிருந்தால் பங்கு அலுவலகம் அல்லது லூயிஸ் (019-622 7440) அவர்களைத் தொடர்பு கொள்ளுங்கள் இவர்களின் பணிக்கூட்டம் மாதத்தின் முதல் செவ்வாய் அன்று மாலை 4-6 மணி வரை ஆலய உணவு விடுதியில் நடைபெறும்.

➢ **உலக நோயாளிகளின் தினம்** இந்த நாளில் வீடுகளில் / மருத்துவமனைகளில் இருக்கும் நோயாளிகள், மனதாலும், உடலாலும் பாதிக்கப்பட்டோர் / மாற்றுத்திறனாளிகள் அனைவரையும் நினைவுகூருவோம். இவர்களுக்குக்காக சிறப்பு நோயில் பூசுதலும் இரக்கத்தின் மன்றாட்டுமாலையும் செபிக்கப்படும். நாள் 11-02-2018 நேரம் பகல் 3.00 மணி இடம்: மினவுதல் தேவாலயம்.

➢ **ஆலயத்தில் உள்ள வகுப்பறைகள் / மண்டபம்** கூட்டங்கள், நிகழ்வுகள் மற்றும் ஒத்திகை ஆகியவற்றை நடத்த ஆலய அலுவலகத்தில் முன்பதிவு செய்துகொள்ளுங்கள். கடைசி நேரப் பயன்பாட்டைத் தவிர்க்கவும்.

➢ **சீனப்பெரு நாள் மதிய விருந்து** மார்ச் 04, 2018(ஞாயிறு) பகல் 12.30 இடம்: மின் கோக் உணவு விடுதி. டிக்கெட்டுகள் ஒரு நபருக்கு ரிம:50/- தொடர்புக்கு : டோரீன் 017-332 6007

➢ புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர் பணிக்குழ் தலைவர் கிளென் செபஸ்டியன் அவர்களுக்கு நம் வாழ்த்துகளைத் தெரிவிப்போம். இவர்களுக்கு தொடர்ந்து ஆதரவு தந்து, நம் செபங்களில் ஒப்புக்கொடுப்போம்.

➢ **ராக்கேலின் திராட்சைத் தோட்டத் தியானம் மார்ச் 16-18, 2018 நடைபெறுகிறது.** தொடர்புக்கு: 016-4190538 (சிரில்லா) விவரங்கள் அனைத்தும் இரகசியம் காக்கப்படும்- நேரம் மாலை 7.00 -9.00 வரை பிப்ரவரி 16 க்குள் பதிந்துகொள்ளவும்.

➢ **தவக்காலத்தில் உணவைத் தவிர்க்கப் போகின்றீர்களா? (திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் வார்த்தை)**
- **காயப்படுத்தும் வார்த்தைகளை தவிர்த்து கனிவான வாத்தைகளைப் பேசுங்கள்**
- **சோகத்தைத் தவிர்த்து நன்றியால் நிறைவடையுங்கள்**
- **கோபத்தைத் தவிர்த்து பொறுமையினைக் கடைப்பிடியுங்கள்**
- **நம்பிக்கையின்மையைத் தவிர்த்து நம்பிக்கை கொள்ளுங்கள்**
- **கவலைப்படுவதை தவிர்த்து கடவுளை நம்புங்கள்**
- **குறை சொல்வதை தவிர்த்து எளிமையை நாடுங்கள்**
- **மன அழுத்தத்தைத் தவிர்த்து செபத்தில் ஈடுபடுங்கள்**
- **கசப்புணர்வைத் தவிர்த்து, உங்கள் இதயங்களை மகிழ்ச்சியால் நிரப்புங்கள்**
- **சுய நலத்தைத் தவிர்த்து பிறரிடம் இரக்கத்தோடு நடந்து கொள்ளுங்கள்**
- **வஞ்சத்தைத் தவிர்த்து ஒப்புரவாகுங்கள்**
- **வார்த்தைகளைத் தவிர்த்து, அமைதியோடு செவிகொடுங்கள்**

➢ **விபூதி புதன் - நம்முடைய உரோமை கத்தோலிக்க திருச்சபை முழுவதும் கடைப்பிடிக்கும் ஒறுத்தலுக்கான நாள்.** இன்று நாம் உண்ணா நோன்பிருந்து, சுத்தபோசனம் (இறைச்சி உண்ணாமை) கடைப்பிடிப்போம்.

➢ **இந்த தவக்காலத்தில் நான் என்ன செய்யமுடியும்?**
- 2018 ஆம் ஆண்டின் தவக்காலச் செய்தியை வாசிக்கவும்.
- அகப்பக்கத்திற்குச் சென்று கூடுதல் விவரங்களை தெரிந்து கொள்ளுங்கள் (lent.aohd.org) (www.facebook.com/Lenten campaign)
- நல்ல தயாரிப்பான ஒப்புரவைச் செய்யுங்கள்
- சிலுவைப் பாதை பக்தி முயற்சியை மேற்கொள்ளுங்கள்
- குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் விசுவாசிகள் அனைவரும் தவக்கால முயற்சி நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்ள அழைக்கப்படுகின்றீர்கள். கூடுதல் விவரங்களுக்கு மறைக்கல்வி ஆசிரியர்கள், இளைஞர் குழு பொறுப்பாளர்கள் அதிச/வட்டார பொறுப்பாளர்களை அணுகவும்.

➢ **தனித்திறமை போட்டி 2018 -** உற்சாகமான ஒரு நிகழ்வாக மாற்றியதற்காக ஏற்பாட்டு குழுவினருக்கும் பங்கேற்பாளர்கள். பார்வையாளர்கள் அனைவருக்கும் நன்றி.

ஆங்கில பாடல் குழுவினர் ஆர்கன் இசைக்கருவி வாசிப்பவர்களை சனி 6.00 மணி திருப்பலி மற்றும் ஞாயிறு 9.00 மணி திருப்பலிக்கு உங்களை அழைக்கிறார்கள். ஆர்வமுள்ளோர் தொடர்புக்கு அமாண்டா (சனிக்கிழமை) 016- 367 3049 / எட் ரியன் (ஞாயிறு 9.00 திருப்பலி 010 897 0642

➢ **2018 ஆம் ஆண்டின் தவக்கால தியானம்:** மனதின் அடிப்படை மாற்றம் - உங்கள் உடைகளைக் கிழித்துக்கொள்ள வேண்டாம், உங்கள் இதயங்களைக் கிழித்துக்கொள்ளுங்கள் (யோவேல்: 2:13)
**தமிழ்:** பிப்ரவரி 16, 2018 (வெள்ளி) காலை 10.00 -6.00 (மாலை) அருள்திரு. குழந்தைசாமி, இந்தியா
**ஆங்கிலம் :** பிப்ரவரி 17 & 18 (சனி) காலை 9.00 - 8.00 (இரவு) & ஞாயிறு காலை 9.00- பகல் 2.00 வரை சகோதரர் ஜூன் அந்தோய்ன், கோலாலும்பூர்
**சீனம்:** பிப்ரவரி 10, 2018(சனி) பகல் 2.00 - மாலை 6.00 வரை ( அருள்திரு. தோமஸ் கூ CDD, மலாக்கா
**தேசிய மொழி** 10 & 11, 2018 சனி - காலை 9.00- 4.00 (மாலை) & ஞாயிறு காலை 9.00- 12.30 வரை அருள்திரு. பேட் ரிக் மசாங், CSSR, ஈப்போ.
பதிவுகள் அனைத்து திருப்பலிகளுக்குப் பின்னும் நடைபெறும்.

➢ கிறிஸ்துவ புகுமுக வேட்பாளர்களின் தேர்வுச் சடங்கு எ பிப்ரவரி 25, 2018 (ஞாயிறு) பகல் 2.00 மணிக்கு திருக்குடும்ப தேவாலயம், காஜாங். இவர்களை நம் செபங்களில் ஒப்புக்கொடுப்போம்

➢ திருவழிபாட்டுக் குழு (தமிழ்) ஒன்றுகூடல் 23-02-2018 (வெள்ளி) மாலை 8.15 மணிக்கு, விவிலிய அறை. அனைத்து தமிழ் அதிச பொறுப்பாளர்கள் மற்றும் ஆலய பணிக்குழு தலைவர்கள் அனைவரையும் இதில் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்

- **தேவ அழைத்தல் முகாம் - பிப்ரவரி 24-25 ,2018** இளைஞர்களுக்காக ஸ்தாபாக் நல்லாயன் ஆலயத்தில் நடைபெறும் (வயது 18-35 வரை)

**சீனப் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு பெப்ரவரி 16, 17ஆம் திகதிகளில் ஆலய அலுவலகம் முடப்பட்டிருக்கும்.**

**சீனப் புத்தாண்டை கொண்டாடும் அனைவருக்கும் இனிய "சீனப் புத்தாண்டு நல் வாழ்த்துகள்"**